©

தமிழ்நாடு அரசு [பதிவு எண்.

2026

# தென்காசி மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

### ஆணையின்படி வெளியிடப்பட்டது

தென்காசி, மார்ச் 9, 2026 [எண். 5

மாசி 25, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு-2057

## மாவட்ட ஆட்சியர் இறுதி அறிவிக்கை

ந.க.எண்.COLRD/619/2026-A4, நாள்.07.03.2026

**தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த துத்திகுளம் கிராம ஊராட்சியிலுள்ள சிகாமிபுரம் குக்கிராமத்தை ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த மேலவீராணம் கிராம ஊராட்சியுடன் இணைத்தல் – இறுதி அறிவிக்கை வெளியிடுதல்**

அரசாணை (நிலை) எண், 371, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.2(1)) துறை, நாள்-31.12.2025 இன்படி தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த துத்திகுளம் கிராம ஊராட்சியிலுள்ள சிவகாமிபுரம் குக்கிராமத்தை ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த மேலவீராணம் கிராம ஊராட்சியுடன் இணைத்து ஊரக உள்ளாட்சி பதவிகளுக்கான பதவிக்காலம் முடிவுற்ற பின்னர் மேற்குறிப்பிட்ட அரசாணை நடைமுறைப்படுத்தப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.



File No. COLRD/619/2026-A4 (Computer No. 1097379)

Generated from eOffice by SARAVANAKUMAR, ASST(A4)-AD(PANCHAYATS and AUDIT).RD-COLLR-SOUTH-T, ASSISTANT(A4)_AD(AUDIT).RD_COLLR_TKS.DT, Tenkasi-TKS-DT.COLLR on 20/03/2026 12:46 pm

அட்டவணை

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | குக்கிராமங்கள் பிரிக்கப்படுவதற்கு முன் உள்ள கிராம ஊராட்சியின் பெயர் | கலம் 3-ல் உள்ள கிராம ஊராட்சியிலிருந்து பிரிக்கப்படும் குக்கிராமத்தின் பெயர் | கலம் 4ல் உள்ள குக்கிராமம் இணைக்கப்பட உள்ள கிராம ஊராட்சியின் பெயர் | கலம் 5-ல் உள்ள கிராம ஊராட்சியுடன் இணைகப்பட்ட பின் குக்கிராமங்களின் பெயர் | இறுதி ஆணை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | கீழப்பாவூர் | துத்திகுளம் | சிவகாமிபுரம் | மேலவீராணம் (ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம்) | 1. மேலவீராணம்<br>2. சிவகாமிபுரம் | கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம். துத்திகுளம் கிராம ஊராட்சியில் உள்ள சிவகாமிபுரம் குக்கிராமம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மேலவீராணம் கிராம ஊராட்சியுடன் இணைக்கப்படுகிறது. |

மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், துத்திகுளம் கிராம ஊராட்சியில் துத்திகுளம் மற்றும் சிவலிங்கபுரம் ஆகிய இரண்டு குக்கிராமங்களை கொண்டும், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மேலவீராணம் கிராம ஊராட்சியில் மேலவீராணம் மற்றும் சிவகாமிபுரம் ஆகிய இரண்டு கிராமங்களை கொண்டும், மறு சீரமைப்பு செய்யப்பட்டு ஊரக உள்ளாட்சி பதவிகளுக்கான பதவிக்காலம் முடிவுற்ற பின்னர் மேற்குறிப்பிட்ட அரசாணை நடைமுறைப்படுத்தப்படும் என இறுதி அறிவிக்கை செய்யப்படுகிறது.

இடம் : தென்காசி
நாள் : 07.03.2026

ஒப்பம் ..........,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
ஊராட்சிகளின் ஆய்வாளர்,
தென்காசி மாவட்டம்.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் மதுரை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.



File No. COLRD/619/2026-A4 (Computer No. 1097379)
Generated from eOffice by SARAVANAKUMAR, ASST(A4)-AD(PANCHAYATS and AUDIT).RD-COLLR-SOUTH-T, ASSISTANT(A4)_AD(AUDIT).RD_COLLR_TKS.DT, Tenkasi-TKS-DT.COLLR on 20/03/2026 12:46 pm